# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 18.06.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11858/F/2024**

திரு.J.பாபு .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர் வீட்டுவசதி அலுவலகம்,
சென்னை மண்டலம்,
எண்.28, ராமநாதன் தெரு,
திநகர், சென்னை-600017. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் மீதான விசாரணை 13.05.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திருமதி.ஜீ.சீ.இலட்சுமி, கூட்டுறவு சார்பதிவாளர், துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், திநகர், சென்னை அவர்கள் இன்று (18.06.2026) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, மனுதாரர் கோரிய தகவல்களை 15/06/2026 நாளிட்ட கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவல் ஆகியவற்றை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு இனம் 5,6,7,8,9,10 மற்றும் 11 ஆகிய இனங்களுக்கு தகவல்கள் ஏதும் இச்சங்கத்தில்

இல்லை என தகவல் வழங்கியுள்ளது ஏற்புடையது அல்ல என ஆணையம் கருதி கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள இனம் 5,6,7,8,9,10 மற்றும் 11 ஆகிய இனங்களுக்கு ஆவணங்கள் கிடைக்கப்பெறாதபட்சத்தில், அது குறித்துப் பிரமாண வாக்குப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றை தயார் செய்து மனுதாரருக்கு அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலினை 30.06.2026 அன்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)
**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 11858/F/2024**
பெறுநர்
**பொது அதிகார அமைப்பு:-**

பொதுதகவல் அலுவலர்/
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர் வீட்டுவசதி அலுவலகம்,
சென்னை மண்டலம்,
எண்.28, ராமநாதன் தெரு, திநகர், சென்னை-600017.

**மேல்முறையீட்டாளர்:-**

திரு.பாபு,
19, 4வது மெயின் ரோடு,
ஏ.ஜி.எஸ் காலனி, வேளச்சேரி,
சென்னை-600 042.

Copy to file: KR/PA